[*2019 ஜூலை 4*

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை துறை அலுவலர்கள்மூலம் ஆய்வு மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாகக் கொண்டுவர ஏற்கெனவே நிறைவேற்றிய தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் மாநில மொழிகளில் மொழியாக்கம் செய்து வழங்கப்பட வேண்டுமென்று ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே, அது விஷயமாக அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.*

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை மாநில மொழியில் பிரசுரிப்பதற்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் முன்வந்திருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தி.

அரசியல் சட்டம் தந்திருக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்தின்படி—உச்ச நீதிமன்றம் உறுதியாக நிற்பது மேலும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாக உள்ளது. ஆங்கிலம் தவிர

2019 ஜூலை 4] [திரு. மு.க. ஸ்டாலின்]

கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட ஐந்து மொழிகளில் இனிமேல் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மொழியாக்கம் செய்து வழங்கிட ஒரு வாய்ப்பு உருவாக்கியிருக்கிறது. ஆனால், அந்த ஐந்து மொழிகளின் பட்டியலைப் பார்த்தீர்களென்றால், தமிழ் மொழி மட்டும் அதில் இடம் பெறவில்லை என்பது உள்ளபடியே ஏமாற்றத்தை அளிக்கிறது. வருத்தத்தைத் தருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தினுடைய 8-வது அட்டவணையில் அலுவலக மொழி என்ற அந்தஸ்த்தில் செம்மொழியாம், மூத்த தொன்மைமிக்க மொழியாம் தமிழ் மொழி இடம் பெற்றிருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தில் ஒரு தீர்மானத்தை இந்த அரசு கொண்டு வருமென்று சொன்னால், வரும் என்று சொன்னால் அல்ல, கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவரக்கூடிய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏக மனதாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வருவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

'உயர் நீதிமன்றத்திலே தமிழ் வழக்கு மொழி' என்ற அரசினர் தீர்மானத்தை இதே அவையில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 6-12-2006 அன்று நிறைவேற்றி, ஆளுநர் அவர்களின் பரிந்துரையோடு, குடியரசுத் தலைவர் அவர்களிடம் தலைவர் கலைஞர் அவர்கள் 8-12-2006 அன்று நேரடியாகச் சென்று கொடுத்தார் என்பதை நான் இந்த அவைக்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி என்ற அந்தத் தீர்மானத்தையும், தமிழக அரசின் சார்பில் மீண்டும் வலியுறுத்திட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், அரசிற்கு எந்தவித தகவலும் வரவில்லை. ஆனால், பத்திரிகை வாயிலாகவும், இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி

[திரு. சி.வி. சண்முகம்] [2019 ஜூலை 4

அவர்களுடைய உத்தரவின்படி, இந்தியாவில் இருக்கின்ற மாநில மொழிகளிலே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் மற்றும் அதன் சாராம்சம் முழுவதும் அந்த மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் என்று சொல்லி, முதற்கட்டமாக, இந்தி, தெலுங்கு, கன்னடம், மராட்டி, அஸ்ஸாமி, ஒரியா ஆகிய ஆறு மொழிகளில், மற்ற மாநில மொழிகளில் மொழி பெயர்க்கப்படவில்லை. மொழி பெயர்க்கப்படமாட்டாது என்று சொல்லப்படவில்லை. முதற்கட்டமாக இந்த ஆறு மொழிகளில் வெளியிடப்படும். எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது என்பதற்கான காரணம் உச்ச நீதிமன்ற இணையதளத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே எந்த மாநிலத்திலிருந்து வழக்குகள் அதிகமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவோ அதைக் கணக்கில் எடுத்து அந்த மாநிலத்திற்கு முதலில் முன்னுரிமை கொடுத்து எடுக்கப்பட்டிருக்கிறது. நேற்று உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள் அந்தந்த மாநில மொழிகளில் அந்தத் தீர்ப்புகள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது பத்திரிகைவாயிலாக வந்த உறுதி செய்யப்படாத செய்தி. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல், தமிழ் மொழி, தொன்மையான மொழி. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் வர வேண்டுமென்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

முற்பகல் 11-40

ஆகவே, நமது உறுப்பினர்களின் உணர்வுகளை உச்ச நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவிலே தமிழிலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் வெளி வருவதற்கு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

அதுபோல், உயர் நீதிமன்றத்தினுடைய அலுவல் மொழியாக தமிழ் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கின்றது. உங்களுடைய ஆட்சியிலும் அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2013-ல் முதலமைச்சர்கள் மாநாடு மற்றும் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தக் கோரிக்கையினை வைத்தார்கள். 2013-ல் வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசினுடைய மத்திய அலுவல் குழு பரிந்துரை செய்து உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்விலே வைத்து பரிசீலிக்கப்பட்டும் அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்கள் 2015-ல் நடைபெற்ற

2019 ஜூலை 4] [திரு. சி.வி. சண்முகம்]

முதலமைச்சர்கள் மாநாடு மற்றும் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். தொடர்ந்து 4 முறை கடிதங்கள் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாக தற்போது மத்திய அரசு தமிழக அரசினுடைய கோரிக்கையை, மத்திய அரசின் அலுவல் மொழித் துறை மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பும் என்ற கடிதத்தை தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கின்றது. ஆகவே, நம்முடைய அரசு, அம்மா அவர்களுடைய அரசு உயர் நீதிமன்றத்திலே தமிழை அலுவல் மொழியாகக் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கண்டிப்பாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றின் கருத்துகள் ஒருமித்த கருத்தாக இருக்கின்றன. எனவே, சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றி அனுப்பி வைத்தால் சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தமிழிலே மொழி மாற்றம் செய்து வழங்கப்படும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் அனைத்து மொழிகளிலுமே மொழி மாற்றம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லியிருக்கின்றபோது நாம் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பது, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் சொல்லுங்கள். அந்த நீதிமன்றத்தினுடைய அலுவலில் தலையிட்டு, நாம் ஏதோ அழுத்தம் கொடுப்பதாக அமைந்துவிடும். பொறுத்திருந்து பார்ப்போம். உச்ச நீதிமன்றத்தில் என்ன நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்பதைப் பார்த்த பிறகு நாம் அழுத்தம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இருந்தாலும் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.